EN/04/Oct- Nov/2024

**BELIEVERS EASTERN CHURCH WORLD HEADQUARTERS**

**Office of the Metropolitan, St. Thomas Community, Kuttapuzha P. O., Thiruvalla - 689103 Kerala, India**

# மேய்ப்பரின் மடல்

அக்டோபர்/நவம்பர் 2024

சகல பேராயர்மார்கள் மற்றும் ஆயர்மார்கள், அருட்தந்தையர்கள், திருத்தொண்டர்கள், நற்செய்தியாளர்கள், திருச்சிலுவை சகோதரிகள் மற்றும் பிலிவர்ஸ் ஈஸ்டன் சர்ச்சின் உலகம் முழுவதும் இருக்கின்ற அனைத்து விசுவாசிகளுக்கும், பிதா, குமாரன், தூய ஆவியானவரின் நாமத்தினால் ஆசி மற்றும் வாழ்த்துக்கள். – ஆமென்! ✝

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே,

இயற்கைக்கு, பருவக்காலங்கள் இருப்பது போலவே, திருச்சபைக்கும் ஒவ்வொரு பருவங்கள் உண்டு. நமது ஆன்மீக வருடத்தில், உபவாசம், திருவிழாக்கள், பிரார்த்தனை மற்றும் ஒழுக்கம், தர்மம் கொடுத்தல் போன்ற ஒழுக்கங்கள் நம்மை மிகவும் பலப்படுத்த ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. ‘‘மண்ணுலகு இருக்கும் நாளளவும், விதைக்கும் காலமும், அறுவடைக் காலமும், குளிரும் வெப்பமும், கோடைக்காலமும், குளிர்க்காலமும் பகலும் இரவும் என்றும் ஓய்வதில்லை’’ என தொடக்க நூல் 8:22 வசனத்தில் நாம் வாசிக்கின்றோம். இந்த பருவங்களும் வழிபாட்டு முறைமைகளும் வாழ்க்கைக்கு சுமையாக அல்ல, ஆசீர்வாதமாகவும், நாம் நம்பிக்கை மற்றும் விசுவாசத்தில் வலுவாகவும் ஆழமாகவும் வளர உதவி செய்கின்றது.

நவம்பர் மாதம் என்பது ஒரு புதிய வழிபாட்டு வருடத்தை குறிக்கின்றது. இது கிறிஸ்து பிறப்பை முன்னறிவிக்கும் பருவம் மற்றும் திருவருகை காலம் ஆகிய புனித பருவங்களைக் குறிக்கின்றது. இக்காலம் கடந்த வருடத்தைக் குறித்து சிந்திக்கவும், புதிய வருடத்தை சரியான விதத்தில் அமைத்துக்கொள்ளவும் கிடைத்திருக்கின்ற சிறந்த காலமாகும். சில சமயங்களில் நீங்கள் திருவிவிலிய வாசிப்பை புறக்கணித்திருக்கலாம், வழிபாடுகளில் கலந்துக்கொள்வதை தவறவிட்டிருக்கலாம், அல்லது ஆன்மீக ரீதியாக சோம்பேறியாக இருந்திருக்கலாம், ஆனாலும் இந்த புதிய வருடத்தில் தவராமல், தெய்வீக வழிபாட்டு முறைமையில் கலந்துக்கொண்டு புனித நற்கருணையில் பங்கேற்கவும், குடும்ப மன்றாட்டை மிகவும் பொறுப்போடு நிறைவேற்றவும் வேண்டுமென தீர்மானித்துக்கொள்ளவும். மேலும், இவ்வருடத்தில், இறைவன் நமக்கு வழங்கிய பரிசுகளைப் பயன்படுத்தி தேவாலயத்தை கட்டியெழுப்பவும், இறைவனுடைய அன்பை மற்றவர்களுடன் பகிர்ந்துக்கொள்ளவும். திருச்சபையின் பணிகளில் ஊக்கமாக ஈடுபடவும் வேண்டுமென தீர்மானித்துக்கொள்ளவும்.

பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகளுக்கு திருச்சபையின் நாட்காட்டியைப் பின்பற்ற கற்றுக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனில் அவர்களின் ஆன்மீக வாழ்க்கை வீடுகளிலிருந்தே ஆரம்பிக்கின்றது. இது அவர்களின் வாழ்க்கைக்கான அத்திவாரமாகும். மேலும், சிறு வயதிலிருந்தே மன்றாடவும், உபவாசம் இருக்கவும், தர்மம் கொடுக்கவும் நம்பிக்கையான வாழ்க்கை வாழவும் அவர்கள் கற்றுக்கொள்வது மிக முக்கியமாகும். புனித பவுல் அடிகளாரின் வசனத்தின் மூலம் நான் வாலிபர்களை தைரியப்படுத்துகின்றேன். ‘‘நீ இளைஞனாய் இருப்பதால் யாரும் உன்னைத் தாழ்வாகக் கருதாதிருக்கட்டும். பேச்சு, நடத்தை, அன்பு, நம்பிக்கை, தூய்மை, ஆகியவற்றில் நீ விசுவாசிகளுக்கு முன்மாதிரியாய் விளங்கு’’ (1 தீமோத்தேயு 4:12)

தூய திருச்சபை மற்றும் கிறிஸ்துவுக்குள் நாம் இந்த புதிய வருடத்திற்குள் பிரவேசிக்கும் போது, அதை ‘காலத்தின் அடையாளமாக’ அணுகாமல், நம்மை மீண்டும் அர்ப்பணிப்பதற்கான ஒரு வாய்ப்பாக நினைத்து, அதற்குள் பிரவேசிப்போம். நமது தீர்மானங்கள் மனிதருடைய மனவிருப்பத்தின்படி மட்டுமல்லாமல், இறைவனுடைய இரக்கத்திலும் பலத்திலும் வேரூன்றி இருக்க வேண்டும். ஒற்றுமையாகவும் கிறிஸ்துவானவருக்குள் ஒன்றாக ஒரே சரீரமாக இருந்து, மகிழ்ச்சியோடு திருவிழாக்களை கொண்டாடி, மனத்தாழ்மையோடும், மனந்திரும்புதலோடும் உபவாசத்தை கடைப்பிடித்து, இந்த பருவங்களில் பயணிப்போமாக.

இந்த மன்றாட்டை நான் புனித பவுல் அடிகளாரோடு சேர்ந்து மன்றாடுகின்றேன். ‘‘நம்பிக்கையின் வழியாக, கிறிஸ்து உங்கள் உள்ளங்களில் குடிக்கொள்வாராக! அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக! இறை மக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்துவினுடைய அன்பின் அகலம், நீளம், உயரம் ஆழம் என்னவென்று உணர்ந்து, அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்துக்கொள்ளும் ஆற்றல் பெறுவீர்களாக! அதன் மூலம் கடவுளின் முழு நிறைவையும் நீங்கள் பெற்றுக்கொள்வீர்களாக!’’ (எபேசியர் 3:17-19). நமக்குள் செயல்படும் திரியேகத்துவ இறைவனுடைய வல்லமையானது, அனைத்து புனிதர்கள் மற்றும் தூய தேவமாதாவின் மஸ்தியஸ்தத்தின் மூலமாக, எல்லா மகிமையும் கனமும் திருச்சபையிலும் முழு உலகத்திலும் நம் வாழ்நாளிலும் இப்பொழுதும் எப்பொழுதும் வெளிப்படுவதாக. ஆமென். ✝

கிறிஸ்துவுக்குள் உங்கள் தகப்பன்,

**திகதி:** 25-அக்டோபர்-2024
**இடம்:** உலகளாவிய தலைமையகம்

மோரன் மோர் சாமுவேல் தியோபிலஸ்
மெட்ரோபொலிட்டன் அடிகளார்.

---

**கவனத்தில் கொள்க:** தயவு செய்து இதை உங்கள் பிராந்திய மொழியில் மொழிப்பெயர்த்து, விசுவாசிகளை தைரியப்படுத்தும்படியாக அனைத்து பங்குத்திருச்சபைகளிலும் வாசிக்கும்படியாக செயல்படுங்கள்.